**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**MCOP.No.164/2023- PW-2**

| | |
|---|---|
| Name | திரு.மனோகரன் |
| Husband/Father Name | திரு.மொட்டை |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **10.04.2026.**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. மனுதாரர்கள் அழைத்ததின் பேரில் இந்த வழக்கில் சாட்சி சொல்ல வந்தேன். விபத்தில் இறந்து போன குப்பம்மாள் என் உறவினர் இல்லை. வாலாஜா பேருந்து நிலையத்திற்கு உள்ளே வாகனங்கள் வரக் கூடிய முன்பகுதியில் விபத்து நடந்தது. விபத்து நடந்த இடம் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடம் என்றால் சரிதான். மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடத்தில் பேருந்தை ஓட்ட முடியாது என்றால் சரிதான். இறந்து போன குப்பம்மாள் விபத்து சமயத்தில் சாலையை வேகமாக கடக்க முயன்றுள்ளார் என்றால் சரிதான். பேருந்து வருவதை கவனிக்காமல் குப்பம்மாள் பேருந்தின் முன் பகுதியில் மோதி கீழே விழுந்துள்ளார் என்றால் சரியல்ல. குப்பம்மாள் கவனக்குறைவாக பேருந்தின் முன் வந்து தானாக மோதி கீழே விழுந்ததால் தான் பேருந்தின் முன் சக்கரம் அவரது இடது காலில் ஏறியுள்ளது என்றால் சரியல்ல. இறந்து போன குப்பம்மாள் என்பவரின் அஜாக்கிரதையால் தான் விபத்து நடந்துள்ளது என்றாலும், பேருந்து ஓட்டுநர் எந்த தவறும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.